**2022 இல் ஏற்பட்ட கற்றல் இழப்பினை பூரணமாக்குவதற்கான விசேட பாடத்திட்டம்**

# தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம்

## தரம் 08 – முதலாம் தவணை

(2022ம் ஆண்டு ஜுலை 25ம திகதி தொடக்கம் செப்தெம்பர் 07ம திகதி வரையான காலப்பகுதியில் மட்டும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது)

தகவல் தொழில்நுட்பத் துறை
விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பப் பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை
www.nie.lk

# அறிமுகம்

நாட்டில் ஏற்பட்டுள்ள கடுமையான பொருளாதார நெருக்கடி காரணமாக, போக்குவரத்து சேவைகள் மற்றும் பல்வேறு சேவைகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. 2022ம் ஆண்டின் தொடக்கத்தில் இருந்து பாடசாலைகள் இடையிடையே மூடப்பட வேண்டிய நிர்ப்பந்தங்கள் ஏற்பட்டது.

பாடசாலைகள் மூடப்பட்ட காலத்தில் நிகழ்நிலை மூலம் தொடர்ச்சியான கல்வியை வழங்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகளால் எதிர்பார்த்த அளவு வெற்றியைப் பெறமுடியவில்லை. இந்நிகழ்நிலை கற்றலிற்கு மாணவர்களின் வருகை திருப்திகரமாக இருக்கவில்லை. ஏனெனில் நிகழ்நிலைக் கல்விற்க்குத் தேவையான இணைய வசதி அணுகல் மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள் மாணவர்கள் மத்தியில் இல்லாமையால் ஆகும்.

இலங்கையின் தொலைதூரக் கல்வி அணுகல் மற்றும் தரம் ஆகியவற்றில் குறைபாடுகள் காணப்படுகிறது. ஆசிரியர்களை மையமாகக் கொண்ட கல்வியை வழங்கும்முறை இலங்கையில் நடைமுறையில் உள்ளது. இந்த அமைப்பில், மாணவர்களை பாடசாலைகளிலிருந்து அந்நியப்படுத்துவது கல்வி கட்டமைப்பில் மோசமான போக்கைக் காட்டியது.

தற்போதுள்ள சவால்களுக்கு மத்தியிலும், குறைந்தபட்சம் ஓரளவாவது பௌதீகப் பாடசாலைகளை நடத்துவது எதிர்கால சந்ததியினரின் கல்வி மட்டத்தை மேம்படுத்த பங்களிப்பு செய்யும். இது தொடர்பாக மாகாண மட்டங்களில் கல்வி அமைச்சினால் சேகரிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் முதலாம் தவணைக்கான மொத்த பாடசாலை நாட்களின் எண்ணிக்கை 21 ஆக இருக்குமென மதிப்பிடப்பட்டது.

மூன்று நாட்களுக்கு பாடசாலை நடத்தவும், வாரத்தின் மற்ற இரண்டு நாட்களில் மாணவர்கள் வீட்டில் இருந்தே கற்றுக்கொள்ளவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. முதலாம் தவணை தொடர்பான பாட உள்ளடக்கத்தை உள்ளடக்கும் வகையில், கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் கல்வி அமைச்சின் அதிகாரிகள் பாடசாலைகளை பிற்பகல் 2.30 மணி வரை நடத்துவதற்கு தீர்மானித்துள்ளனர்.

முதலாம் தவணைக்கான தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப பாடத்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள பாடவேளைகளின் எண்ணிக்கை 10. கடந்த பாடசாலை நாட்களில் 06 பாடவேளைகள் நிறைவடைந்துள்ளதாகக் கருதப்படுகிறது. ஜூலை 25 முதல் செப்டம்பர் 7 வரை காலப்பகுதியில் மிகுதியான 04 பாடவேளைகள் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கேற்ப, பாடத்திட்டம் அத்தியாவசிய தேர்ச்சி மட்டங்களை உள்ளடக்கியதாக வடிவமைப்பு செய்யப்பட்டுள்ளது.

## ஆசியர்களிற்கான வழிகாட்டல்கள்

நாட்டின் தற்போதைய சூழ்நிலையின் போது இழந்த நேரத்தின் காரணமாக அத்தியாவசிய ICT உள்ளடக்கத்தை உள்ளடக்கும் வகையில் இந்த ஆவணம் வடிவமைக்கப்பட்டுள்ளது

1. பின்வரும் அட்டவணையில், பாடத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு பின்பற்ற வேண்டிய தரம் 09 மாணவர்களின் அத்தியாவசிய பாட உள்ளடக்கங்கள் உள்ளன
   ஆசிரியர் எந்த அத்தியாவசிய உள்ளடக்கத்தையும் (பின்வரும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ள உள்ளடக்கத்தைத் தவிர) தங்கள் விருப்பப்படி சேர்க்கலாம்.
   கற்பித்தல் மற்றும் கற்றல் செயல்பாட்டில் கலப்பு கற்றல் முறையைப் பின்பற்றுமாறு ஆசிரியர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.
2. பாடத்தை மேம்படுத்த ”குருகெதர” திட்டத்தையும் ”இ-தக்சலாவா” கற்றல் அணுகுமுறைகளையும் பயன்படுத்த மாணவர்களுக்கு வழிகாட்டுதல்
3. ”குருகெடரா” மற்றும் ”இ-தக்சலாவா” ஐ அடைவதில் சிரமம் உள்ள மாணவர்களுக்கு போதுமான ICT உள்கட்டமைப்புகளை வழங்குதல்.

# 2022 இல் ஏற்பட்ட கற்றல் இழப்பினை பூரணமாக்குவதற்கான விசேட பாடத்திட்டம்

**( Recovery Plan for Learning Loss – 2022 )**

*(இந்த பாடத் திட்டம் தரம் 08 முதலாம் தவணையின் 04 பாடவேளைகளில் கற்றல் மற்றும் கற்பித்தல் செயல்முறையைத் தக்கவைக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.)*

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | கற்றல் பேறுகள் | பாட உள்ளடக்கம் | ஆசிரியர் வழிகாட்டியில் செயல்பாட்டு எண் | பாடப் புத்தகத்தில் பாடத்தின் பக்க எண் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|---|---|
| **தவணை 1 இற்**கான தரம் 08 இல் தேர்ந்தெடுக்கப்பட்ட கற்றல் பேறுகள் மற்றும் பாடங்கள் | | | | | | |
| 2. இயக்க முறைமையைப் பயன்படுத்தி கணினியினை வினைத்திறனுடனும் விளைதிறனுடனும் பயன்படுத்துவார் | 2.1. உள் அமைவுகளையும் அமைப்புக்களையும் மேற்கொள்வதற்கு இயக்கமுறைமை யைப் பயன்படுத்துவார் | ○ அமைப்புக்களை மேற்கொள்வார்<br>○ கோப்பு பண்புகனள மாற்றுவார்<br>○ நீட்சியினனக் கொண்டு கோப்புகளை தேடுவர் | • பிராந்திய அமைப்புக்கள்<br>• கோப்பு பண்புகள்<br>• கோப்பு தேடல் | 15-22 வரையான பக்கத்தில் காணப்படும் அலகு 2.1 இணைப் பார்க்கவும் | பக்க இலக்கங்கள் 13-16 பார்க்கவும் | 01 |
| | 2.2 கணினிகளின் அடிப்படைப் பிரச்சினைகளைச் சரி செய்தல் மற்றும் பராமரிப்பு என்பவற்றை மேற்கொள்வார் (வன்பொருள் மற்றும் மென்பொருள் ) | ○ சில வன்பொருள் தொடர்பான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பார்<br>○ மென்பொருள் தொடர்பான சிக்கல்களுக்குத் தீர்வு கண்ணப்பர் | • கணினிகளின் சிறிய பிழைகளைத் திருத்துதல்<br>• வன்பொரு ள் சிக்கல்கள் (விசைப்பலகை, சுட்டி, மின்வடம், வலையமைப்பு வடம், VGA வடம்)<br>• ஒலி வெளியீட்டு சிக்கல்கள் (speaker இணைப்பு, ஒலிஅளவினைச் (volume) சரி செய்தல்)<br>• துறைகளின் இணைப்பு (PS/2, USB, Micro USB VGA, HDMI, | 24-26 வரையான பக்கத்தில் காணப்படும் அலகு 2.2 இணைப் பார்க்கவும் | பக்க இலக்கங்கள் 16-35 பார்க்கவும் | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | கற்றல் பேறுகள் | பாட உள்ளடக்கம் | ஆசிரியர் வழிகாட்டியில் செயல்பாட்டு எண் | பாடப் புத்தகத்தில் பாடத்தின் பக்க எண் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|---|---|
| | | | Parallel,RJ45, Memory Card Reader)<br>• கணினி மென்பொருள் பிழையறிந்து<br>• தீர்வு காணல்<br>• சீர்குலைந்த மென்பொருள் (Corrupt software)<br>• வெறும் திரை( Blank Desktop) | | | |
| 3<br>நாளாந்தச் செயற்பாடுகளில் சொல்முறை வழிப்படுத்தல் மென்பொருளி னைப் பயன்படுத்துவார் | 3.1 ஆவணமொன்றினன உருவாக்குவதில் சொல்முறை வழிப்படுத்தல் மென்பொருளின் அடிப்படைச் செயற்பாடுகளைப் பின்பற்றுவார். | ○ சொல்முறைவழிப்படுத்தல்மென்பொருளினைப்பயன் படுத்தி வடிமைக்கப்பட்ட ஆவணமொன்றினை உருவாக்குவார் | • ஆவணமொன்றினை உருவாக்குதல்,திறத்தல் , சேமித்தல் மற்றும் மூடுதல்<br>• வாசகத்தின் வடிவமைப்பு | 28-32 வரையான பக்கத்தில் காணப்படும் அலகு 3.1 இணைப் பார்க்கவும் | பக்க இலக்கங்கள் 38-41 பார்க்கவும் | 01 |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | **மொத்த பாடவேளைகள்** | **04** |